4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 9 முதல் 13 வரையிலான (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) 5 அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

நண்பகல் 12–00

(ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன், சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர், பண்பாளர் திரு. உதயநிதி அவர்களுக்கு வணக்கம்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டுக்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்றாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளை (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

(இ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவின் இரண்டாவது அறிக்கையை (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ஈ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், அரசுத் தலைமைக் கொறடா, மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளியவனான என்னை மனுக்கள் குழுவின் தலைவராக நியமித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், எனக்கு உந்துசக்தியாக இருக்கின்ற சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. உதயநிதி அவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் ஒன்றாவது மற்றும் இரண்டாவது அறிக்கைகளை (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) மனுக்கள் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. வரவு–செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2022–2023, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2022–2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது பொது விவாதம். விவாதத்தைத் துவங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். ஒவ்வோர் உறுப்பினரும் மிக அதிகபட்சமாக 15 நிமிடங்களுக்குள் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசவிருக்கின்றார்கள்.*